Registered as a Newspaper பக்கங்கள்: 4 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 24 07-06-94 செவ்வாய்க்கிழமை ஓசை 109

## 65 வயதைக் கடந்தோருக்கு கொடுப்பனவு வழங்க திட்டம்

அறுபத்தி ஐந்து வயதைக் கடந்த வருமானம் எதனையும் பெறாத சகல இலங்கை பிரஜைகளுக்கும் மாதாந்த கொடுப்பனவை வழங்கும் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இதன் படி ஆரம்பத்தில் மாதாந்தம் ஐந்நூறு ரூபா கொடுப்பனவு வழங்கப்பட இருப்பதாகவும், அரசாங்க சேவையில் இருந்து ஓய்வூதியம் பெறுவோரைத் தவிர்ந்த அனைவருக்கும் இக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகவும் [4ஆம் பக்கம் பார்க்க]

## மாகாண சபை அதிகாரங்களை பறிக்க அரசாங்கம் முயற்சி

### நீதிமன்றம் செல்வோம் என்கிறார் சந்திரிகா

(கொழும்பு)

மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை பறிப்பதற்கு அரசு முயல்கிறது. இதற்கு நாம் இடமளியோம் அவசியமானால் அதற்கெதிராக நீதிமன்றமும் செல்வோம் என மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்தார்.

மேல்மாகாண முதலமைச்சராக பதவி ஏற்று ஒரு வருடம் பூர்த்தியானதை முன்னிட்டு கடந்த வாரம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு கூறினார். நான் முதலமைச்சராகி ஒரு வருடம் சென்றும் எனக்கு போதிய பாதுகாப்பை அரசு தரவில்லை. எனது உயிருக்கு ஆபத்துள்ளது என நான் கூறியும் அரசு எந்த நடவடிக்கையும்எடுக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

## புலிகள் - அரசு பேச்சுவார்த்தை ஜப்பான் அரசாங்கம் முயற்சி

### அரசின் நிலையறிவதில் விருப்பம்

(கொழும்பு)

சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை ஒன்றை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் ஜப்பான் இறங்கியுள்ளது. இம் முயற்சியில் இறங்குவது குறித்து சிறிலங்கா அரசின் பிரதிபலிப்பு எவ்வாறு இருக்கும் என்பது பற்றி ஜப்பானிய அரசு அறிய விரும்புவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி விவகாரங்களுக்காக ஜப்பானிய பிரதிநிதி சிறிலங்காவின் நிலைப்பாடு என்ன என்பதை தெரிவிக்குமாறு சிறிலங்கா வெளியுறவு அமைச்சை கேட்டுள்ளார். பொதுமக்களின் எதிர்ப்புணர்வுக்கு உட்படாத பேச்சுவார்த்தை மூலம் ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கமுடி (4ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த செலவிற்கு மேலும் 1100 கோடி ரூபா வழங்குக!

# பாதுகாப்பு அமைச்சின் கோரிக்கையை

# நிதி நெருக்கடியால திறைசேரி நிராகரித்தது

## வங்குரோத்து நிலையில் அரசு

(கொழும்பு)

## அகதிமுகாம் மீது ஷெல்வீச்சு

# நிதி நெருக்கடியால் திறைசேரி நிராகரித்தது

## வங்குரோத்து நிலையில் அரசு

(கொழும்பு)

**வடபகுதி மீதான பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளவும், இராணுவ நிர்வாகச் செலவுகளைக் கவனிக்கவும் 1100 கோடி ரூபா அவசர தேவையென பாதுகாப்பு அமைச்சு விடுத்த கோரிக்கையை திறைசேரி நிராகரித்துள்ளது. அரச நிறுவனங்களிடம் கடன் பெறும் நிலையில் உள்ள திறைசேரி, பாதுகாப்பு அமைச்சின் இக் கோரிக்கையை குறை நிரப்பு பிரேரணை மூலம் வழங்கும் நிலையில் இல்லை எனவும் கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கின்றது**

1994ஆம் ஆண்டு செலவினங்களுக்காக பாதுகாப்பு அமைச்சிற்கு 2200 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதால் மேலும் நிதி ஒதுக்க முடியாது எனதிறைசேரியினால் அறிவிக்கப்பட்டுள்ளதாககொழும்பிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. வரவுசெலவு திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சின் 1994 ஆம் ஆண்டிற்கான செலவினங்களுக்கு 2200 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் வருட ஆரம்பத்தில் சீனாவிலிருந்து 510 கோடி ரூபாவுக்கு ஆயுதங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. ரஷ்யாவிலிருந்து விமானங்களையும் தென்னாபிரிக்காவிலிருந்து பவள் கனரக வாகனங்களையும் செக்கோசிலவாக்கியாவிலிருந்து ரி-55 யுத்த டாங்கிகளையும், சீனாவிலிருந்து பீரங்கிப்படகுகளையும் இறக்குமதி செய்தது. இவ்வகையில் 2200 கோடி ரூபாவும் செலவிடப்பட்டு விட்டது.

ஐந்துமாதகாலத்தினுள்ளேயே இப்பணம்செலவிடப்பட்டு விட்ட நிலையில் நிதிப் பிரச்

(4ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் தாக்குதலால் காவலரண் அழிப்பு

## திருமலை தாக்குதலில் ஒரு சிப்பாய் பலி

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம் மாதுறுவெவ என்னும் இடத்தில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ காவலரண் ஒன்றின் மீதும் அதற்கு முன்பாக நின்ற ஊர்காவற் படையினர் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். கடந்த சனிக்கிழமை அதிகாலை நடத்தப்பட்ட இத்தாக்குதலில் ஒரு இராணுவச் சிப்பாய் பலியாகியுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி காவலரண் முற்றாக அழிக்கப்பட்டது. இத்தாக்குதலின் போது இரண்டு விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

அங்கிருந்த இராணுவப் பொருள்கள் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டன.

இதன் போது,

- ★ நடுத்தர ரவைகள் -430
- ★ கிற்பாக் - 01

(4ஆம் பக்கம் பார்க்க)


## இரு போராளிகள் வீரச்சாவு

திருகோணமலையில்கடந்த சனிக்கிழமை அதிகாலை மாதுறுவெவ என்ற இடத்தில் அமைந்திருந்த இராணுவ காவலரண் ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலின் போது இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த கப்டன் தேவன்/சங்கிலி (திருகோணமலை), கப்டன் வேந்தன்/எழில்நம்பி (திருகோணமலை) ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



கப்டன் தேவன் (சங்கிலி)



கப்டன் வேந்தன் (எழில்நம்பி)

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## நாளை மறுதினம் சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

முன்னாள்அமைச்சர்களான காமினிஜயவிக்கிரமபெரேரா, ரொனி டிமெல் ஆகியோர் நாளை மறுதினம் பாராளுமன்ற உறுப்பினர்களாக சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

மேலும் காமினி திசாநாயக்கா அமைச்சராக அன்றைய தினம் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்வார் என்றும் தெரிய வருகின்றது.

## கலந்துரையாடல்

வடமராட்சிக் கோட்டத்திற்கு உட்பட்ட (வடக்கு, கிழக்கு உட்பட) அனைத்து கடற்றொழிலாளர் சங்க நிர்வாகத்தினர், ச. ச. நிலைய நிர்வாகத்தினர், விளையாட்டுக்கழக நிர்வாகத்தினர் ஆகியோருக்கான கலந்துரையா

(4ஆம் பக்கம் பார்க்க)

# அகதிமுகாம் மீது ஷெல்வீச்சு

# ஒருவர்பலி; ஐவர் காயம்

## சங்கானைப் பகுதியில் அனர்த்தம்

(நமது நிருபர்)

வலிகாமம் மேற்குப் பகுதி அகதிமுகாம் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் இளம்குடும்பஸ்தர் ஒருவர் உடல்சிதறிப்பலியானதுடன் ஐவர் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை 7.15மணியளவில் பலாலி மற்றும் மாதகல் இராணுவ முகாம்களிலிருந்து சில்லாலை, பண்டத்தரிப்பு, சாந்தை, பரா

(4ஆம் பக்கம் பார்க்க)

# புகைமண்டலம் அடங்கிய போது மகன் துடிதுடித்துக் கொண்டிருந்தார்

## காயமடைந்த பெண்மணி தெரிவிப்பு

(நமது நிருபர்)

ஷெல் விழுந்து வெடித்ததும் எழுந்த புகைமண்டலம் அடங்கும் போது மகன் இரத்த வெள்ளத்தில் துடிதுடித்துக் கொண்டிருந்ததைக் கண்டபோதும் எழுந்து அருகில் செல்ல முடியாது தவித்தேன்

இவ்வாறு நிச்சாமம் பகுதி அகதி முகாம் மீது நேற்று நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலின் போது மகனைப்பலி கொடுத்த சின்னப்பிள்ளை துரைராசசிங்கம் என்பவர் தெரிவித்தார்.

இச்சம்பவத்தின் போது காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் சின்னப்பிள்ளை சம்பவம் பற்றி மேலும்விபரிக்கையில் 'காலை தேநீர் அருந்திக் கொண்டிருந்த போது வெடிச்சத்தங்கள் கேட்டன. இதைத் தொடர்ந்து ஷெல் சத்தங்கள் கேட்டன. மிக அருகில் ஷெல் விழுந்து வெடிக்கும் சத்தங்கள் கேட்டதால் முற்றத்துக்கு ஓடி வந்தோம்.

அப்போது திடீரென வந்த ஷெல் ஒன்று முற்றத்தில் வீழ்ந்து வெடித்தபோது நான் காயம்பட்டு வீழ்ந்தேன். அப்போது வீடு முழுவதும் புகை மண்டலமாகக்கிடந்தது நான் எழுந்து இருக்க முற்பட்ட போது சற்றுதூரத்தில் மகன் துடித்துக் கொண்டிருந்தான். அவனது உடம்பிலிருந்து இரத்தம் பெருமளவில் பெருகிக்கொண்டிருந்தது. ஆனால்அரக்கி அவன்அருகில் செல்ல முயன்றேன் முடியவில்லை.

அதற்குள் அயலவர்கள் ஓடி வந்து எல்லோரையும் தூக்கி ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்தார்கள். வழியில் மகன் இறந்துவிட்டதாக அறிந்தேன் என்றார்.

## பதுங்கியிருந்து தாக்கியதில் இரு போராளிகள் வீரச்சாவு

பண்டத்தரிப்புப் பகுதியில் நேற்றுக்காலை 6.40 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் விடுதலைப் புலிகள் போராளிகள் இருவர் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் ஒப்பிலான்|சுதன் [சேனாதிராஜா நாகேந்திரராஜா, சண்டிலிப்பாய் வட

(4ஆம் பக்கம் பார்க்க)



லெப். ஒப்பிலான் [சுதன்]



லெப். அன்பழகன் [அன்ரன்]

## வரி விளம்பரம்

**சேவல் குஞ்சுகள் விற்பனை**

2கிழமை வளர்ச்சியடைந்த பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. 'மல்லிகாபதி' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய்; (8452)

**சலனம்**

உலக சினிமா தரம் பற்றிய விமர்சன சஞ்சிகை. எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது. (8471)

**சாரதா**

கலை இலக்கிய சஞ்சிகை அடுத்த இதழ் கோமல் சுவாமிநாதன் பேட்டியுடன் இலங்கைச் சிறப்பிதழ். எல்லாக் டைகளிலும் விற்பனையாகிறது. (8472)

**துளிர்**

தமிழ் நாடு, புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் மாணவர்களுக்கு அதிக பயன்தரக் கூடியது. (8474)

**உடன் தேவை**

நல்ல நிலையிலுள்ள 15KW மின்பிறப்பாக்கி (ஜெனரேற்றர்) ஒன்று உடனடியாக விலைக்குத் தேவைப்படுகிறது தொடர்பு கொள்ளவும்;- சக்திப் பகுதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் காங்கேசன்துறை வீதி, தாவடிச்சந்தி, தாவடி, தமிழீழம். (சி-9526)

# வர்த்தகத்திணைக்களத்திற்கு பொருள் புனர்வாழ்வுப்பிரிவு வழங்குவதில்லை

(யாழ்ப்பாணம்)

வர்த்தகத் திணைக்களம் எவற்றிற்கும் யாழ். புனர்வாழ்வுப் பிரிவால் பொருள்கள் எவையும் விநியோகம் செய்யப்படுவதில்லை. அவை கொழும்பிலிருந்து தாமாகவே பொருள்களை கொள்வனவு செய்கின்றன.

இவ்வாறு யாழ். உதவித் திட்டப்பணிப்பாளர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

கூட்டுறவுச் சபையினர் குற்றம் சாட்டி வருவதை அவர் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

புனர்வாழ்வுப் பிரிவால், வர்த்தகத் திணைக்களத்திற்கு எதுவித சலுகைகளும் வழங்கப்படுவதில்லை. வர்த்தகத் திணைக்களம் கொழும்பில் உள்ள சில விற்பனை முகவர்களுடன் தொடர்பு வைத்துள்ளது. இம் முகவர்கள் மூலம் தொகையாக கொள்வனவு செய்யப்படும் பொருள்கள் கப்பலில் ஏற்றிவரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

சீனி, சவர்க்காரம், லக்ஸ்பிறே போன்ற பொருள்கள் வர்த்தக திணைக்களங்களில் தாராளமாக எடுக்கக் கூடியதாக உள்ளது.

புனர்வாழ்வுப் பிரிவினரின் எந்தச் சலுகையும் வர்த்தகத் திணைக்களத்திற்கு இல்லை. எம்மோடு இணைத்துக் கூறுவதும் குற்றம்சாட்டுவதும் பொய்யானவை என்று அவர் மேலும் தெரிவித்தார். (தி,பா)

## கண்காட்சி

பனைவளக் கண்காட்சியும், கைப்பணிப் பொருட்களுக்கான போட்டியும் இம் மாதம் 19-ம் திகதி வன்னிப்பெரு நிலப்பரப்பில் நடைபெற உள்ளது.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இக் கண்காட்சியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியும் வன்னி, முல்லை, மணலாறு, மாவட்ட ப.தெ.வ.அ.கூ. சங்கங்களும், பனை அபிவிருத்திச் சபையும் இணைந்து நடாத்துகின்றன.

வன்னிப்பெரு நிலப்பரப்பில் நிரந்தரமாக வசிப்பவர்கள் எவரும் இப் போட்டிகளில் பங்குபற்றலாம்.

## அளக்கப்பட்ட பின்னரே மண்ணெய் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினரால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்படும் மண்ணெண்ணெய் அளவிடப்பட்டே வழங்கப்படுகிறது.

இந்த மண்ணெண்ணெய் குறைவாகச் சங்கங்களைச் சென்றடைகின்றன என்ற கூற்றில் உண்மையில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பிலிருந்து கப்பலில் ஏற்றப்பட்டு எடுத்துவரப்படும் மண்ணெண்ணெய் பீப்பாக்கள் ஒவ்வொன்றும் மீற்றர் வைத்து அளவிடப்படுகின்றன.

அளவிடப்பட்ட பின்னர் குறைவானமண்ணெண்ணெய் இருப்பதற்கு சாத்தியமில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (தி, பா)

## படையினர் மகிழ கலைஞரை அழைத்துவருவதற்குதிட்டம்

(கொழும்பு)

வட பகுதியில் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள சிறிலங்காபடையினரை மகிழ்விக்கும் பொருட்டு பிரபல கலைஞர்களின் குழுவொன்று வட பகுதிக்கு விஜயம் செய்ய இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்பு அமைச்சின் பணிப்புரையின் பேரில் அம்பலாங்கொட தேசப் பிரேமி சங்கம் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் இந்த விஜயத்திற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

படையினரின் உபயோகத்திற்கென பல தரப்பட்ட பாவனைப் பொருள்களையும் இக் குழு எடுத்துச் செல்ல இருக்கிறது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை வடக்கு கிழக்கு யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் படையினருக்கெனத்து மன்டிப்புரா என்னும் பெயரில் ஒலிப்பதிவு நாடாவொன்றும் வெளியிடப்பட்டுள்ளது. இவ் ஒலிப்பதிவு நாடாவில் இடம் பெற்ற 12 பாடல்களையும் உடுதாதுளாஞ்சலி சந்திர சேகர பாடியுள்ளார்.

## போசாக்கு வாரப்போட்டி

சங்கானை கல்விக் கோட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான போசாக்கு வாரப்போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வட்டு. திருஞானசம்பந்த வித்தியாசாலையில் சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.ப விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறும். (41)

## கிணற்றுநீர் அசுத்தமாதல் யாழ் மாவட்டத்தில் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள கிணற்று நீர் சமீப காலத்தில் அசுத்தமடைந்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலை தொடர்ந்தால் குடி நீரினால் மக்கள் பாதிப்படைய வேண்டிய நிலை ஏற்படும்.

யாழ் பல்கலைக்கழக புவியியல்துறை பீடத்தைச் சேர்ந்த திரு. பாலச்சந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற சுற்றுப்புறச் சூழல் தின நிகழ்விற்கு தலைமைவகித்துபேசும் போதேஅவர்மேற்கண்டவாறு தெரிவித்தார் அவர் தொடர்ந்து பேசும்போது, யாழ். மாவட்டத்தில் வலிகாமம்பகுதியிலும் யாழ். நகரப் பகுதியிலும் உள்ள கிணற்று நீர் அதிகமாக அசுத்தமடைந்துள்ளது. தென்மராட்சி, வடமராட்சி கிணற்று நீரைவிடமேற்படி பகுதி கிணற்று நீர் தீவிரமாக அசுத்தமடைந்து வருகிறது. இதனால் சுற்றுப்புறச் சூழல் பெரியளவில் பாதிப்படையும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றார். (தி)

## மெய்வன்மைப் போட்டிகள்

(தொல்புரம்)

சங்கானை கல்விக் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 1994 ஆம்

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



பாரிற் பூ மலர்ந்தது

யாழ் மருத்துவமனையில் பகுதிநேர

## புற்றுநோய் மருத்துவர் நியமிக்க அமைச்சு மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலைக்கு புற்றுநோய் சிறப்பு வைத்தியர் ஒருவர் தென் பகுதி வைத்தியசாலையில் இருந்து மாற்றலாகி வர விரும்பினால் அவரை நியமிக்க அனுமதிப்பதாகவும் அவ்வாறு இல்லாமல் பகுதிநேர

றிச் சென்று வருவதால் அவரின் வைத்திய சேவையை முழுமையாகப் பெற்றுக் கொள்ள முடியாது. அத்துடன் வீண் காலதாமதங்களும் தோன்ற வாய்ப்புள்ளதாகவும் ஆனால் நிரந்தரமாக நியமிக்கப்படும் வைத்தியரினால் இவ்வாறான பிரச்சி

## நினைவு கூருகின்றோம்...

07. 06. 1994

1986-ம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய,

★ அன்பு (செல்லத்தம்பி அன்பழகன்-அக்கரைப்பற்று-அம்பாறை)

★ பவா (நவரட்ணராஜா கோபாலகிருஷ்ணன்-அக்கரைப்பற்று-அம்பாறை)

★ இராசன் (நாகமணி இராசலிங்கம்-அக்கரைப்பற்று-அம்பாறை)

கிளிநொச்சியில் இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரின் போது வீரச்சாவெய்திய,

ஹீரோராஜ் (குலசேகரம் கெங்காதரன்-புகையிரத நிலைய வீதி, மல்லாகம்-யாழ்)

நீசன் (சின்னத்துரை மனோகரன் - ஐயனார்கோயிலடி, மல்லாகம்-யாழ்)

குட்டித்தம்பா (சண்முகரத்தினம் கணேசானந்தன்-சுழிபுரம் மேற்கு-யாழ்)

சசி/வன்னி (இராசரத்தினம் சசீந்திரன்-சசீந்திரன் வீதி, அரியாலை-யாழ்)

இதே சம்பவத்தின்போது சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 04 தமிழர்கள்.

1987-ம் ஆண்டு வீரச்சாவெய்திய,

★ பதூர்த்தீன்-குஞ்சான் (காளித்தம்பி காதம்பவா-அக்கரைப்பற்று-அம்பாறை)

★ சைமன் (சாமித்தம்பி கிருபைராசா-அக்கரைப்பற்று மட்டக்களப்பு)

காங்கேசன்துறையில் காபர் வியூ முகாம் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின்போது வீரச்சாவெய்திய,

★ கரிகாலன் (மாரிமுத்து சிவானந்தம்-தம்பலகமம்- திருமலை)

★ மோகன் (கமலநாதன் ஜெயகணேஸ்-மல்லாகம்-யாழ்)

13வது நாளாக சிறிலங்காபடையினரால் மேற்கொண்ட ''ஒப்பறேசன் லிபறேசன்'' நடவடிக்கையின் போது கீரிமலையில் வைத்து காணாமல் போன,

★ முருகு (சு. முருகதாஸ்-காரைநகர்-யாழ்)

இதே நடவடிக்கையின் போது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட இளைப்பாறிய தலைமை ஆசிரியர்.

மட்டு-சித்தாண்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

1988-ம் ஆண்டு வவுனியா-செட்டிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1990-ம் ஆண்டு வீரச்சாவெய்திய,

கமால் (— — மட்டுநகர்)

1991-ம் ஆண்டு மட்டுநகரில் தரவைப்பகுதியில் மாடுதாக்கியதில் எமைப்பிரிந்த,

ரதன் (கணபதிப்பிள்ளை சிறிதரன்-புன்னைச்சோலை-மட்டு)

மன்னார் - சிலாவத்துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின் போது விழுப்புண் ணடைந்த நிலையில் வீரச்சாவெய்திய-

பவான் (துரைசிங்கம் திவாகரன்- கணேஸ்வரம்,

கலையரங்கில் நடைபெற்ற ... சுற்றுப்புறச் சூழல் தின நிகழ் ... றார். (தி)

## மெய்வன்மைப் போட்டிகள்

(தொல்புரம்)

சங்கானை கல்விக் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 1994 ஆம் ஆண்டிற்குரிய மெய்வன்மைப் போட்டிகள் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி மைதானத்தில் சங்கானை கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டி நிகழ்வுகளின்போது வலிமேற்கு பிரதேச செயலாளர் திரு. கா. சந்திரராசா பிரதம விருந்தினராகவும், வலிகாமம் கோட்ட மாணவர் அமைப்பு மகளிர் பொறுப்பாளர் செல்வி எழிற்கொடி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். மேலும் இப்போட்டி நிகழ்வை அடுத்து எதிர்வரும் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் இப்போட்டிகளுக்கான தெரிவு நிலைப் போட்டி இடம் பெறும். (41)

## பச்சை இல்லம் முதலிடம்

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேச சபை சங்கானை உ.ப அலுவலக பிரதேசத்தில் இயங்கும் அம்பாள் சனசமூக நிலையத்தினால் விளையாட்டுப்போட்டிகள் அண்மையில் நடாத்தப் பட்டன.

சங்கானை நிகர வைரவர் கோவில் முன்றலில் நிலையத் தலைவர் தலைமையில் நடைபெற்ற மேற்படி விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளின் போது பிரதமவிருந்தினராக வலிமேற்கு பிரதேச செயலாளர் திரு. கா. சந்திரராசா, சங்கானை வட்ட வைப் பொறுப்பாளர் திரு. ந. மதி ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக வலிமேற்கு பிரதேச சபை செயலாளர் திரு. க. திரவியம், சங்கானை உப அலுவலக பொறுப்பதிகாரி பொ. சண்முகானந்தசிவம், வலிமேற்கு வர்த்தக சங்கத் தலைவர் திரு. த. கோவிந்தசாமி மற்றும் பலரும் கலந்து கொண்டனர். இப்போட்டிகளின் போது பச்சை இல்லம் முதலாம் இடத்தையும் சிவப்பு இல்லம் இரண்டாம் இடத்தையும் வென்றெடுத்தன. (41)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



பாரிற் பூ மலர்ந்தது

**12 - 05 - 1972**

வீரச்சாவடைந்தது;

**07 - 06 - 1992**

### வீரவேங்கை சுரதா
(சுகந்தா பிரதாப்சிங்)

மண்ணிந்தத் தமிழீழ மலர்வுக்காய் உழைத்தவளே
மன்னாரிற் சிறுநாவற் குளத்தில் மறைந்தவளே
கண்கள் பனிக்குதடி வரலாறாய் ஆனவளே.

உன்னோடு வீரச்சா உவந்தேற்ற மேஜர் பாரதி, கப்டன் குவேனி, 2-ம் லெப்டினன்ட் பல்லவி எல்லோர்க்கும் இதய அஞ்சலிகள்.

பெற்றோர், உடன்பிறப்புகள்.

நெல்லியடி, (8491)

## எட்டாம் ஆண்டு இதயஅஞ்சலி



தாயின் மடியில்;

28- 5- 1965

தாயக மண்ணில்;

7- 6- 1986

### வீரவேங்கை தீசன்
(சின்னத்துரை மனோகரன்)

கிளிநொச்சியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்.

உன்பிரிவால் வாடும்

அன்பான அப்பா, அம்மா,
அக்கா குடும்பத்தினர்,
அண்ணாமார், தம்பி, தங்கைகள்,
நண்பர்கள், உறவினர்கள்.

''பூம்புகார்'',
மல்லாகம்.

(8492)

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலைக்கு புற்றுநோய் சிறப்பு வைத்தியர் ஒருவர் தென் பகுதி வைத்தியசாலையில் இருந்து மாற்றலாகி வர விரும்பினால் அவரை நியமிக்க அனுமதிப்பதாகவும் அவ்வாறு இல்லாமல் பகுதிநேரமாக யாழ் போதனா வைத்தியசாலைக்கு தென் பகுதியில் இருந்து வந்து கடமையாற்ற எந்த புற்றுநோய் வைத்தியரையும் அனுமதிக்க முடியாது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அண்மையில் கொழும்பு சென்று திரும்பிய யாழ் வைத்தியசாலைப் பணிப்பாளர் மேற்படி விடயம் சம்பந்தமாக சுகாதார அமைச்சுடன் பேசியபோதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு மேலும் தெரிவிக்கையில் பகுதி நேரமாக கடமையாற்ற அனுமதிக்கப்படும் வைத்தியர் தென் பகுதிக்கும் வடபகுதிக்குமென அங்கும் இங்கும் மாறி மாறிச் சென்று வருவதால் அவரின் வைத்திய சேவையை முழுமையாகப் பெற்றுக் கொள்ள முடியாது. அத்துடன் வீண் காலதாமதங்களும் தோன்ற வாய்ப்புள்ளதாகவும் ஆனால் நிரந்தரமாக நியமிக்கப்படும் வைத்தியரினால் இவ்வாறான பிரச்சினைகள் தோன்றுவதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

இங்கிருந்து சென்று காலியில் கடமையாற்றி வருகின்ற புற்றுநோய் சிறப்பு வைத்தியராகிய திரு. பிள்ளே என்பவரை யாழ் போதனா வைத்தியசாலைக்கு பகுதி நேரமாக கடமையாற்ற அனுமதிக்கும்படி சுகாதார அமைச்சை யாழ் வைத்தியசாலைப் பணிப்பாளர் கோரியதையடுத்தே இவ்வாறு தெரிவிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

மேலும் தென் பகுதியில் இருந்து எந்த புற்று நோய் வைத்தியர்களும் யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றலாகி வருவதைவிரும்பவில்லை என தெரிவிக்கப்பட்டது. (பா, க, தி)

## மாணவர்முழு மனிதர்களாக ஆசிரியர் உதவ வேண்டும்

-பொன். தியாகம்

(யாழ்ப்பாணம்)

''மாணவர்கள் தங்களைத் தாங்கள் ஆளுகின்ற புத்திஜீவிகளாக உருவாக வேண்டும்'' இவ்வாறு தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் தெரிவித்தார்.

நேற்று முன்னம் யாழ்மத்தியகல்லூரியில் நடைபெற்ற யாழ்கோட்டமாணர் எழுச்சி நாள்நிகழ்வில்கலந்துகொண்டு சிறப்புரை யாற்றுகையில் அவர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் ஆசிரியர்கள், அதிபர்கள், புத்திஜீவிகள் ஆகியோர் மாணவர்களை முழு மனிதர்களாக்க வேண்டும் அவர்கள் தங்களைத்தாங்களே வழிநடத்துவார்கள் அத்துடன் போராட்டத்துக்கு உறுதுணையாக நிற்பார்கள் என தெரிவித்தார்

அங்கு தொடர்ந்து யாழ் உதவி அரச அதிபர் திரு. குணராஜா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரைநிகழ்த்துகையில்.

உலகரீதியாக வழிகாட்டுகின்ற ஓர் விழாவாக இந்த மாணவர் எழுச்சிதின விழா அமைந்துள்ளது. இதனால் தமிழீழம் ஓர் படி முன்னேறியுள்ளது.

இந்த மாணவர் தின விழாவை அறிமுகப்படுத்திய தன் மூலம் உலகத்திற்கு புதிய தொன்றை அறிமுகப் படுத்தியுள்ளோம்.

அத்துடன்ஒவ்வொருநாடும் தனது இனத்திற்காக போராடிக்கொண்டிருக்கின்றது. ஆனால் அது ஈழத்தில் முனைப்பாக இருக்கின்றது எனத் தெரிவித்தார்.

அங்கு யாழ் கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. அருளானந்தம் தலைமை உரை நிகழ்த்துகையில்.

உலகிலே தொழிலாளர் தினம், ஆசிரியர்தினம் போன்றவை கொண்டாடப்படுகின்றனமாணவர்களுக்கென்றுஓர் தினம் ஒதுக்கப்படவில்லை. ஆனால் இன்று தமிழீழத்தில் மாணவர்களுக்காக மாணவர் எழுச்சிதினம் கொண்டாடப்படுகின்றது என தெரிவித்தார். (பா)

1991-ம் ஆண்டு மட்டுநகரில் தரவைப்பகுதியில் மாடுதாக்கியதில் எமைப்பிரிந்த,

**ரதன்** (கணபதிப்பிள்ளை சிறிதரன்-புன்னைச் சோலை-மட்டு)

மன்னார் - சிலாவத்துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின் போது விழுப்புண்ணடைந்த நிலையில் வீரச்சாவெய்திய-

**பவான்** (துரைசிங்கம் திவாகரன்- கணேஸ்வரம், அளவெட்டி - யாழ்)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது கொல்லப்பட்ட கடற்றொழிலாளியான தமிழிளைஞன்.

1992ஆம் ஆண்டு மட்டு - காரைமடுப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**பிரவணகுமார்-மகேஸ்** (பாக்கியராஜா ரவீந்திரன்- கல்முனை - அம்பாறை)

**கருணானந்தம்-குகதாஸ்** (முருகுப்பிள்ளை குருநாதன் - ஆயித்தியமலை - மட்டு)

மன்னார் - சிறுநாவற்குளம் சிறிலங்கா இராணுவக்காவலரணை வழிதவறி அண்மித்த போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

மன்னார் மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளர்,

**கப்டன் குவேனி** (நகுலேஸ்வரி இலட்சுமணன்- முழங்காவில்- மன்னார்)

விடுதலைப்புலிகள் மகளிர் துணைப்பொறுப்பாளர்,

**மேஜர் பாரதி** (சத்தியபாமா விஸ்வலிங்கம்- கல்லுவம், கரணவாய் மேற்கு - யாழ்)

**2-ம் லெப். பல்லவி** (பானுமதி பாலசுப்பிரமணியம் - வலந்தலை, காரைநகர் - யாழ்)

**சுரதா** (சுகந்தா பிரதாப்சிங் - நெல்லியடி,கரவெட்டி - யாழ்)

மணலாறு - தங்கபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின் போது வீரச்சாவெய்திய-

**பாஸ்கரன்-வெங்கடேஸ்வரன்** (முருகையா சிவகுரு - நீவியமோட்டை, வவுனியா)

**செல்வகுமார்** (கந்தசாமி சுந்தரலிங்கம்- நெடுங்கேணி வீதி, ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

**றொபேட்-தென்தமிழன்** (இராசநாயகம் இளந்தீபன் - மல்லாவி - மாங்குளம்)

யாழ் - கட்டுவனில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரின் போது வீரச்சாவெய்திய-

**லெப். தமிழன்-பீற்றர்** (கேதீஸ்வரன் மகேஸ்வரன் 'துணைவி' வட்டுக்கோட்டை - யாழ்)

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பலியான மீனவர் 02 பேர்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-9609)

சிந்தனைக்கு

எனது திட்டம் மிக எளிமையானது. நான் ஆட்சி செலுத்த விழைகின்றேன் என்பதே அது.

- பெனிட்டோ முஸ்லோலினி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 07.06.1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024

தபால் பெட்டி எண் - 05

# பிரேமா குடும்பத்தின் மௌனம் கலைகிறது?

கடந்த ஓரிரு வாரங்களில் பிரேமதாசா குடும்பம் விடுக்கும் கோரிக்கைகள், வெளியிடும் அறிக்கைகள், பத்திரிகைப் பேட்டிகள் என்பன டி. பி. விஜேதுங்காவிற்கும் அவரது அரசிற்கும் பெரும் மன உளைச்சல்களையும், சங்கடங்களையும் ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

பிரேமதாசா கொலை தொடர்பாக குடும்பத்தினர் எழுப்பியுள்ள சந்தேகத்தில் இருந்து தொடங்கிய இவ் விவகாரம், அதிகாரிகளின் அசமந்தப் போக்கு அரசாங்கத்தின் அக்கறையீனம் எனத் தொடர்ந்து செல்கின்றது. இதேசமயம், அரச தரப்பினரோ அன்றி பொலிஸ் தரப்பினரோ கொடுக்கும் விளக்கத்தையோ அன்றி விபரங்களையோ அவர்கள் ஏற்பதாகவும் தெரியவில்லை.

இந்நிலையில், மூன்று தினங்களின் முன் ஹேமா பிரேமதாசா, ஜனாதிபதி தேர்தல் ஆட்சேப வழக்கில் தனது கணவருக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா வழங்க வேண்டிய 17 லட். ரூபா நஷ்டஈட்டை வழங்கத் தேவையில்லை என அறிவித்துள்ளமையானது இவ் விவகாரம் புதியதொரு கட்டத்தைத் தொட்டுள்ளதாகவே கருத இடமுண்டு.

ஜனநாயக மரபுகள், பெருந்தன்மைகள், விட்டுக்கொடுப்புகள் என்பவற்றிற்கு எல்லாம் அப்பாற்பட்டதே சிறிலங்கா அரசியலாகும். இந்நிலையில், ஹேமா பிரேமதாசா நஷ்டஈடு வேண்டாம் எனக் கூறியுள்ளமையானது மேற்குறிப்பிட்ட உயர்பண்புகளின் அடிப்படையிலானது அல்ல எனத் துணிந்து கூற முடியும். இதன் காரணமாகவே ஹேமாவின் நடவடிக்கைகள் புதிய கட்டத்தை அடைந்துள்ளது என்று கூறவைக்கின்றது.

டி. பி. விஜேதுங்கா அண்மைக் காலத்தில் பிரே...

மட்டக்களப்பில்

# வேளாண்நிலவேலி அகற்ற படையினர் மிரட்டல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சாவாறு, கோட்டாக்குளம், சேனைக்காடு, ஆறாம் கண்டம் ஆகிய பகுதிகளிலுள்ள தமிழ் மக்களின் வேளாண் நிலங்களின் பாதுகாப்பு வேலிகளை அகற்றும்படி பாதுகாப்பு படையினர் மிரட்டல் விடுத்துள்ளனர்.

வன விலங்குகளிடமிருந்து வேளாண் பயிர்களை பாதுகாக்கும் பொருட்டு விவசாயிகள் வேலிகள் அமைப்பது தெரிந்ததே. இந்த வேலிகள் வெட்டப்பட்டமையால் வன விலங்குகளிடமிருந்து வேளாண் பயிர்களை பாதுகாப்பதில் விவசாயிகள் பெரும்சிரமத்தை அனுபவிக்க நேரிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# இரண்டு குழந்தைகளுடன் கிணற்றில் குதித்த தாய்

## குழந்தைகள் மரணம்; தாய் மீட்பு

முல்லைத்தீவு கேப்பாபிலவு கிராமத்திலுள்ள பிள்ளையார் கோவில் கிணற்றில் தனது இரு குழந்தைகளுடன் குதித்ததாய் பிள்ளைகளை இழந்துள்ளார். இச் சம்பவத்தில் அயலவர்களால் காப்பாற்றப்பட்ட தாய்தற்போது முல்லைத்தீவு காவல் துறையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் த. நிரோசன் (4 வயது), த. சிவசாந்தினி (4 மாதம்) ஆகிய இரு குழந்தைகளும் உயிரிழந்தனர். தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு தற்போது முல்லைத்தீவு காவல் துறையினரின் பாதுகாப்பில் இருக்கும் யோகராணி (வயது 30)யின் கணவர் குடும்பத்தகராறு காரணமாக அண்மையில் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

# மலையக மக்கள் பிரச்சினை உலகரங்கிற்கு செல்லட்டும்

--- பெ. சந்திரசேகரன்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரச்சினை எவ்வாறு சர்வதேசப் பிரச்சினையாக மாறிவிட்டதோ அதேபோல மலையக மக்களின் பிரச்சினைகளும் உலக மக்களுக்கு எடுத்துக் கூறப்பட வேண்டும். இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் மத்திய மாகாணசபை உறுப்பினருமான பெ. சந்திரசேகரன் தெரிவித்தார். பொகவந்தலாவ டின்சின் தோட்டத்தில் நடைபெற்ற முன்னணியின் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்,

மலையகமக்கள்புதிய பாதையை நோக்கி செல்ல வேண்டும். மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு புதிய வடிவம் கொடுக்க வேண்டும். இதை செய்யாதவரை மலையக மக்களின்பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படாது. மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு அரசு மனம் வைத்தால் இலகுவாக தீர்வுகாண முடியும். ஆனால் அரசு மனம் வைக்காமையினால் அவை தீர்க்கப்படாமல் நீடிக்கின்றது.

# சுற்றுச் சூழலுக்கான அச்சுறுத்தல் வளர்முக நாடுகளிலும் ஏற்பட்டுள்ளது

- பேராசிரியர் பாலகிருஷ்ணன்

(யாழ்ப்பாணம்)

சுற்றுச் சூழலுக்கான அச்சுறுத்தல் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலேயே முதலில் ஏற்பட்டன. தற்போது வளர்ந்து வரும் ஏனைய நாடுகளிலேயும் படிப்படியாக இப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறுநேற்றுமுன்தினம் மாலை யாழ்பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற உலகசுற்றாடல் தினத்தையொட்டிய - சூழல் மாசடைதல், பேணுதல், அபிவிருத்தி பற்றிய கருத்தரங்கில் பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

சூழல் பாதுகாப்பு நிறுவனமும், யாழ் பல்கலைக் கழக புவியியற் பீடமும் இணைந்து நடாத்திய இக் கருத்தரங்கில் அவர் தொடர்ந்து பேசும் போது,

மேலைத்தேய நாடுகளின் விரைவான பொருளாதார வளர்ச்சியே சுற்றுச் சூழல் மாசடைவதற்கு காரணமாக உள்ளது.

இன்று உலக ரீதியில் இப் பிரச்சினை எடுத்துப்பார்க்கப்படுகிறது. இந்த நிலை நீடித்தால் பெரும் அழிவு ஏற்படும்.

இப்பிரச்சினைக்கு பொருளாதார வளர்ச்சி அடைந்த நாடுகள் பெரும் பங்கினை ஆற்றியுள்ளன.

இதே சமயம் இதற்கு எதிரான இயக்கங்கள் அங்கு தோன்றியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

வறிய, அபிவிருத்தி குறைந்த நாடுகளான மூன்றாம் உலக நாடுகளிலும் சூழல் பாதுகாப்பு தொடர்பாக பிரச்சினை எழுந்துள்ளது.

அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும், இன்னொரு வகையில் வறுமை நிலையில் உள்ள நாடுகளிலும் சூழலுக்கு பெரும் அச்சுறுத்தல் எழுந்துள்ளது.

இங்கு காங்கேசன் துறையில் சீமெந்து ஆலை அமைக்கப்பட்டு அங்குள்ள சுண்ணக்கல்பயன்படுத்தப்பட்டது. சுண்ணக்கல் அங்கு முடியும்கட்டத்தில் உள்ளது. இதனால் சுற்றாடல் சேதமாகியுள்ளது. இதைத் தவிர்த்திருக்கலாம். பயன்படுத்தப்படும் வளங்கள் புதுப்பிக்கப்படமுடியுமானால் புதுப்பிக்கப்பட வேண்டும் என்றார்.

திரு. ஐங்கரநேசன் அவர்கள் அங்கு பேசும்போது இப் பிரச்சினை சமூகத்தின் அடிமட்டம் வரை விளங்க வைக்கப்படவேண்டும். இது தான் பயன்படும்.

இங்குள்ள மரங்களுக்கு பிரதான எதிரி நாமேதான். மனிதனிடம் மரங்கள் தோற்றுப் போகின்றன.

இங்கு நிகழும் மர நடுகை ஒரு சம்பிரதாய நிகழ்வாக நடைபெறக் கூடாது என்றார்.

யாழ் மாநகராட்சி மன்றத்தினரால் சுற்றுச் சூழல் பாதுகாப்பு தினத்தையொட்டிய நிகழ்வுகள் நேற்று முன்தினம் நாவலர்மண்டபத்தில் நடைபெற்றது. அங்கு இறுதியில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (தி)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994-06-07

செவ்வாய் இரவு

08.01 - ஊர்சுற்றும் ஒலி வாங்கி

08.10 - மேஜர் பாரதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''விடுதலைப் பாதையில் மேஜர் பாரதி''

08.30 - செய்திகள்

08.40 - கருத்துக்களம்- ''சுறுசுறுப்பு''

08.50 - களமும் கானமும்- ''மன உறுதி''

### 1994-06-08

புதன் காலை

07.02 - மாவீரவணக்கம்

07.15 - நீங்கள்கேட்டவை

07.30 - செய்திகள்

07.35 - பத்திரிகைச் செய்திகள்

07.40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

கூட்டுறவு சங்கங்கள்

# நட்டஈட்டை பெறுவதற்கு உ. அரச அதிபரின் சிபார்சு?

இராணுவ நடவடிக்கையினால் கைவிடப்பட்ட சங்கங்களின் நஷ்டஈட்டுப் பணத்தைப் பெற அந்தந்தப் பகுதி உதவி அரசாங்க அதிபர்களின் சிபார்சு தேவைப்படுகிறது.

உதவி அரசாங்க அதிபர்களின் சிபார்சு இல்லாமல் நஷ்டஈடு வழங்கப்பட மாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டது.

இராணுவ நடவடிக்கை காரணமாக கைவிடப்பட்ட சங்கங்களின் பொருள்களைப் பற்றிய விபரங்கள் சரியான முறையில் சமர்ப்பிக்கப்படவில்லை.

இந்த நிலையில் நஷ்டஈடு பெறுவது முடியாத காரியம் என்று தெரிவிக்கப்பட்டது. (தி), (பா),.

# சீன விமானம் நேற்று விழுந்து நொருங்கியது

- 159 பேர் பலி

(பீகிங்)

159 பயணிகளுடன் சென்று ... நொருங்கியது. இந்த விமானத்தில் பயணம் செய்த ...

# மாநில அரசைக் கலைக்க காங்கிரசுக்கு தகுதி இல்லை

ஹேமா பிரேமதாசா நஷ்ட ஈடு வேண்டாம் எனக் கூறியுள்ளமையானது மேற்குறிப்பிட்ட உயர்பண்புகளின் அடிப்படையிலானது அல்ல எனத் துணிந்து கூற முடியும். இதன் காரணமாகவே ஹேமாவின் நடவடிக்கைகள் புதிய கட்டத்தை அடைந்துள்ளது என்று கூறவைக்கின்றது.

டி. பி. விஜேதுங்கா அண்மைக் காலத்தில் பிரேமதாசாவின் கொள்கைகள் கடைப்பிடிக்கப்படும் என அறிவித்துவரினும், அவர் பிரேமதாசா அணியினரையோ, அன்றி அவர் குடும்பத்தையோ அரவணைக்கும் நிலையில் இல்லை. அவ்வாறு எதிலும் அவர் காட்டிக் கொண்டிருப்பின் அது அரசியலில் அவர் போடும் நாடகத்தின் தவிர்க்க முடியாத பகுதியே ஒழிய வேறில்லை.

காமினி திசாநாயக்கா, ரொனி டீமெல், காமினி ஜெயவிக்கிரம பெரேரா ஆகிய மூவரையும் ஐ. தே. க வில் முதன்மைப்படுத்தவும், பாராளுமன்ற உறுப்பினர் ஆக்கவும் ஜனாதிபதி டி பி. விஜேதுங்கா பகீரத முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். ஆனால், அவர்களை விட அரசியல் பலமுள்ள பிரேமதாசா குடும்பத்தினருக்கு அவ்வாறான சலுகைகள், வாய்ப்புக்களை வழங்க அவர் தயாராக இல்லை. இதில் இருந்தே டி. பி. விஜேதுங்காவின் நோக்கங்களை இலகுவில் புரிந்து கொள்ள முடியும்.

இதேசமயம், பிரேமதாசா குடும்பத்தினரிடம் இருந்து கிளம்பும் எதிர்ப்புக்களைச் சமாளிக்கும் பொருட்டு, அவர்களுக்கு சாதகமாக சில நடவடிக்கைகளை மேற்கொள்வதாகக் காட்டிக் கொள்ள டி. பி முற்படுகின்றார். இந்தவகையிலேயே பிரேமதாசா கொலை தொடர்பான விபரங்களை குடும்பத்தினருக்குத் தெரிவிக்குமாறு புலனாய்வுத் துறையினருக்குப் பணித்தமையும், பிரேமதாசாவின் மகன் சஜித் பிரேமதாசாவிற்கு ஐ. தே. க. செயற்குழு உறுப்பினராக நியமிப்பதாக அறிவித்ததும் ஆகும். ஆனால்இவை வெறும் கண்துடைப்புக்கள் ஆகும். இதற்கு உதாரணமாக, சஜித்பிரேமதாசா செயற்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டபோதும், இன்னமும் உத்தியோகபூர்வ கடிதம் அவருக்கு வழங்கப்படவில்லைஎன்பதைக் காட்ட முடியும்.

இந்நிலையில், பிரேமதாசா குடும்பத்தினரின் அறிவிப்புக்களும், நடவடிக்கைகளும் புதிய அர்த்தங்களே கொள்ள வேண்டியுள்ளது. ஹேமா பிரேமதாசா எதிரணி எவருடனும் சேரும் எண்ணம் தனக்கு இல்லை என முன்னரே அறிவித்தமை கருத்தில் எடுக்கக் கூடியதாயினும், தற்பொழுது நடவடிக்கைகள் பழிவாங்கலையோ, அன்றி ஓரங்கட்டப்படுவதையோ கைகட்டி, வாய்பொத்திப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம் என விடுக்கப்பட்ட எச்சரிக்கை என்பதில் மட்டும் சந்தேகமில்லை. அதாவது, பிரேமா குடும்பம் தன் மௌனத்தைக் கலைத்து ஐ. தே. கவில் தனது பங்கைக் கோரவும், அதற்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தொடங்கி விட்டது.

# சீன விமானம் நேற்று விழுந்து நொருங்கியது

## - 159 பேர் பலி

(பீகிங்)

159பயணிகளுடன் சென்று கொண்டிருந்த சீன விமானமொன்றுநேற்றுக் காலையில் விழுந்துநொருங்கியது. சியான் மாகாணத்திலிருந்து வாங்கூ நோக்கி ரஷ்யத் தயாரிப்பான இவ் விமானம் செல்வதற்கு திட்டமிட்டிருந்தது. எனினும் சியான் மாகாணத்திலிருந்து புறப்பட்ட எட்டாவது நிமிடத்தில் தரையில் விழுந்து நொருங்கியது. இந்த விமானத்தில் பயணம் செய்தவர்களில் 146 பேர் பயணிகள் எனவும் 13 பேர் விமானப் பணியாளர் எனவும் கூறப்படுகிறது. எனினும் இவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதோ இவர்களின் தற்போதைய நிலை என்பது பற்றியோ எதுவும் அறிவிக்கப்படவில்லை.

# நேசப்படை தரையிறக்கம் பிரான்சில் கொண்டாட்டம்

(லண்டன்)

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது நோர்மன்டி கரையோரத்தில் நேசப்படைகள் இறங்கியதன் ஐம்பதாவது ஆண்டு நிறைவைக்குறிக்கும் பொன் விழாக்கொண்டாட்டங்கள் நடைபெற்றன. இதற்கான ஏற்பாடுகளை பிரான்சும் பிரிட்டனும் மேற்கொண்டுள்ளன.

1944 ஜூன் 6ஆம் திகதியன்று பெரும் எடுப்பிலான கடல் மற்றும் வான் வழிதாக்குதல்கள் மூலம் இக் கடற்கரையில் நேசப்படைகள் இறங்கியதை அடுத்தே ஒரு ஆண்டின் பின்னர் ஜேர்மன் படைகள் தோற்கடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பிரான்சின் பராசூட் துருப்புக்களின் தரையிறக்கமும் பிரிட்டனின் கடற்படையின் கப்பல்களும் கலங்களும்ஆங்கிலக்கால்வாயைகடந்துசென்றதும்இதையொட்டிஇடம்பெற்றன.

# பாலத்தீனியர் ஆர்ப்பாட்டம் இராணு. கண்ணீர்புகை வீச்சு

(ஜெருசலேம்)

பாலத்தீனிய ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இஸ்ரேலிய படையினருக்கும் இடையே நேற்று முன்தினமும்ஏப்ரோன் பகுதியிலும் ராமல்லாவிலும் மோதல்கள் இடம்பெற்றன. ஜெருசலேமிற்கு தெற்கே கல் வீச்சில் ஈடுபட்ட பாலத்தீனியரை கலைப்பதற்காக இஸ்ரேலியப் படையினர் கண்ணீர்ப் புகைக் குண்டுகளையும், றப்பர் தோட்டாக்களையும் பயன்படுத்தியுள்ளனர். பல ஆர்ப்பாட்டக்காரர்கள் இஸ்ரேலிய படையினரால் பிடிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. ராமல்லாவிலும் படையினர் மீது கல்வீச்சும் படையினரின் ரப்பர் தோட்டா துப்பாக்கிப் பிரயோகமும் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# சமந்தா எக்ஸ்பிரஸ் ரயிலில் பெரும் குண்டு வெடிப்பு

(டில்லி)

விசாகப் பட்டினத்திலிருந்து புதுடில்லிநோக்கி சென்று கொண்டிருந்த சமந்தா எக்ஸ்பிரஸ் ரயில் வண்டியின் ஒரு பெட்டியில் நேற்று முன்தினம் மாலையில் குண்டு வெடிப்பு நேரிட்டுள்ளது. இச் சம்பவத்தில் இருவர் பலியாகி இருப்பதுடன், பலர் காயமடைந்துள்ளனர். ரயில் பெட்டியும் முற்றாகச் சேதமடைந்துள்ளது. மத்திய பிரதேச மாநிலத்தின் ராஜ்நன்காவுக்கு அருகே ரயில் சென்று கொண்டிருந்தபோது இக் குண்டு வெடிப்பு நேரிட்டுள்ளது. காயமுற்றவர்களில் பன்னிரெண்டு பேர் ராஜ்நன்காவிலுள்ள சிவில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# மாநில அரசைக் கலைக்க காங்கிரசுக்கு தகுதி இல்லை

## - வை. கோபாலசாமி

(சென்னை)

ஊழல் ஆட்சி நடத்தும் காங்கிரஸ் கட்சிக்கு மாநில அரசுகளைக் கலைக்கும் அதிகாரம் கிடையாது. இவ்வாறு மறுமலர்ச்சி தி. மு. க. பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், நம்மைப் போன்று குறுகிய காலத்தில் இத்தனை சோதனைகளைசந்தித்தவர் எவரும் இல்லை. தடைகளைத்தகர்த்து எறியக் கூடிய ஆற்றல் இயக்கத்தை நடத்திச் செல்லக் கூடிய இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு செயல் வீரர்களுக்கு உண்டு என்பதை நாட்டுக்கு நாங்கள் நிரூபித்துக் காட்டியிருக்கின்றோம்.

தமிழகத்தில் இன்று அரசியல் என்பது மக்களுக்கு தொண்டாற்றுவது என்ற நிலை மாற்றப்பட்டு அரசியலுக்கு வருவதும், பொது வாழ்வில் நுழைவதும் கோடிக்கணக்கில் கொள்ளையடிப்பதற்கும்,ன் ụ ; ந காசு சேர்ப்பதற்கும் தான் என்ற நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தநிலையை மாற்ற மறுமலர்ச்சி தேவை அந்த மறுமலர்ச்சியை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையோடு நாங்கள் அரசியலிலே பயணத்தை தொடங்கியிருக்கின்றோம் எனவும் தெரிவித்தார்.

ஜூன் முதல் திகதியிலிருந்து பாலத்தீன பகுதி

# மருத்துவர்ஆசிரியர்சம்பளம் இஸ்ரேல் அரசு நிறுத்தம்

(ஜெருசலம்)

பாலத்தீனிய சுயாட்சி பிரதேசமான காஸா மற்றும் ஜெரிக்கோ பகுதிகளில் கடமையாற்றும் மருத்துவர் மற்றும் ஆசிரியர் போன்ற ஏழாயிரம் பேருக்கான சம்பளப் பணத்தை ஜூன் முதல் திகதியிலிருந்து நிறுத்தியிருப்பதாக இஸ்ரேலியப் பிரதமர் யிட்சாக் ராபின் கூறியுள்ளார்.

பி. பி. சி. தொலைக்காட்சியின் சர்வதேச சேவையொ பேட்டியளித்த அவர் மேலும் கூறுகையில், இதனால் பொதுச் சேவைகள் பாதிப்படையலாம். நன்கொடைகள் சரியான இடத்தை சென்றடைவதில் பாலத்தீனிய விடுதலை இயக்கம் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். பொது சேவையில் ஈடுபடும் இந்த 7000 பேருக்குமான சம்பளப் பணத்தை பாலத்தீனிய விடுதலை இயக்கம் எங்கிருந்து பெறப் போகிறதோ தெரியவில்லை எனவும் தெரிவித்தார்.

# பொருளாதாரத் தடை விதித்தால் போர் மூளும்

## வட கொரியா எச்சரிக்கை

(சியோல்)

தனது அணுசக்தித் திட்டத்திற்கு எதிராக எந்தவொரு தடை நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டால் போர் மூளும் என்று வடகொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது. தென் கொரியாவை பாதுகாக்க அமெரிக்காவினால் இயலாது போகும் எனவும் இரு கொரியாக்களையும் இணைப்பது தொடர்பான பேச்சுக்களில் ஈடுபட்டிருக்கும் தென் கொரியக் கமிட்டியிடம் வட கொரியா எடுத்துக் கூறியுள்ளது.

அத்துடன் அமெரிக்காவின் அச்சுறுத்தல்களாலும், அடக்குதல்களாலும் கொரியத் தீபகற்பத்தில் மிக மோசமானதொரு நிலைமை உருவாகி வருவதாகவும் வட கொரியா மேலும் தெரிவித்துள்ளது.

வட கொரியாவின் அணுரியாக்டர் ஒன்றிலிருந்து எரிபொருள் ஆயுதத் தயாரிப்புக்காக எடுத்துச்செல்லப்பட்டதா இல்லையா என்பதைக் கண்டறிய நியமிக்கப்பட்ட ஐ. நா. ஆணைக்குழுவிற்கு வட கொரியா அனுமதி மறுத்து விட்டிருப்பதைத் தொடர்ந்து அந்த நாட்டிற்கு எதிராக ஐ.நா. பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டுமென அமெரிக்கா கோரியிருப்பது தெரிந்ததே.

# ஜெனீவா பேச்சு ரத்தானது

(ஜெனீவா)

பொஸ்னியா ஹர்சகோவினா பகுதியில் விரிவான போர் நிறுத்தம் ஒன்றைக் கடைபிடிப்பது தொடர்பாக நடைபெறவிருந்த ஜெனீவா பேச்சுவார்த்தைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

# ராஜீவ் கொலை விசாரணை பகிரங்கமாக நடக்கும்

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கு நீதிமன்ற விசாரணையை பகிரங்கமாக நடத்த சென்னை உயர் நீதி மன்றம் ஏற்றுள்ளது. இதன்படி கொலை விசாரணையை நடத்தும் சிறப்பு நீதிமன்றம் விசாரணையை பகிரங்கமாக நடத்த வேண்டும்.

சென்னை உயர்நீதி மன்றத்தில் சந்தேக நபர்களில் ஒருவரான பேரறிவாளனின் தந்தையார் செய்த ரிட் மனுவை அடுத்தே விசாரணை பகிரங்கமாக நடத்த வேண்டும் என அந் நீதிமன்று தீர்ப்பளித்தது இதுவரை விசாரணை இரகசியமாக நடந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

## அறிவித்தல்

### தமிழீழ மாவட்ட நீதிமன்று யாழ்ப்பாணம்

வழ. இல. மணவிலக்கு 52 | 93

மை. செ. ஜோர்ச் சத்தியேந்திரா
பெண் டொமிற்றில்டா றஞ்சினி,
நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை.
தற்போது, மணியரசன் வீடமைப்புத்திட்டம்,
அரியாலை, யாழ்ப்பாணம்.
வழக்காளி.

எதிர்

மைக்கல் செல்லத்துரைஜோர்ச் சத்தியேந்திரா
நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை.
தற்போது, ஓமான். எதிராளி.

இத்தாற் சகலருமறிக, மேற்குறித்த வழக்காளி மேற்குறித்த எதிராளிக்கு எதிராக இந்த நீதிமன்றத்தில் தமக்கும்குறித்தஎதிராளிக்கும்இடையே12-5-1990 ஆம் திகதியில் நடைபெற்ற பதிவுத் திருமணம் மூலம் ஏற்பட்ட திருமண உறவை நீக்கி விவாகரத்து வழங்குமாறு கோரி இவ்வழக்குத்தாக்கல் செய்துள்ளார்.

எனவே வழக்காளியின் கோரிக்கையை இம்மன்று பரிசீலிப்பதற்கு எதிராக ஆட்சேபனை ஏதும் இருப்பின் இவ்வறிவித்தல் பத்திரிகையில் விளம்பரப்படுத்திய திகதியில் இருந்து ஒரு மாத காலத்தினுள் தமது ஆட்சேபனையை இம்மன்றில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
பதிவாளர்
1994-ம் ஆண்டு சித்திரை மாதம் 20-ம் திகதி
தமிழீழ மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்.

(8489)

## அச்சுக்கோப்பாளர்கள் தேவை

அச்சுக்கோப்பாளர்களாக 2 வருடம் பணியாற்றிய அனுபவமும், பக்கம் அமைக்கக்கூடிய தேர்ச்சியும் பெற்ற ஆண்கள் தேவை. (இரவு - பகல் பணிக்கு) தகுதியுடையவர்கள் தங்களிடம் உள்ள சான்றிதழ்களுடன், 08 - 06 - 94 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கவும்.

மாறன் பதிப்பகம்,
664, மருத்துவமனை வீதி

## கலந்துரையாடல்

தென்மராட்சி பகுதியிலுள்ள சி. க. கூ. சங்க நிர்வாகிகளுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பிரிவினர் கலந்துரையாடல் ஒன்றை இன்று பி. ப. 3.00 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடாத்த உள்ளனர் என யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாசம் அறிவித்துள்ளது.

## வீரவணக்க கூட்டம்

[யாழ்ப்பாணம்]

தென்மராட்சிக் கோட்டம் கொடிகாமம் வட்டத்தில் ஆறாம் மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான வீரவணக்க கூட்டம் இன்று இரவு 8.00மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## விசேட கலந்துரையாடல்

நாளை புதன்கிழமைகாலை 11.00 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் விசேட கலந்துரையாடல் நடைபெற இருப்பதால் பிரதேச செயலகத்தைச் சார்ந்த சகல உத்தியோகத்தர்களும் வெளிக்கள ஊழியர்கள் உட்பட தவறாது சமுகம் தருமாறு நல்லூர் பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

## 'விடுதலைப் புலிகள்' ஏடு நாளை வெளிவருகின்றது

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' இதழின் வைகாசி மாத ஏடு நாளை வெளிவருகின்றது,

'பாதுகாப்புச் செலவீனங்களால் அரசு எதிர் கொள்ளும் நெருக்கடி' என்ற தலைப்புச் செய்தியைத் தாங்கியுள்ள இவ் இதழில் 'சீதன அரக்கனுடன் ஒரு சொற் போர்' என்ற கருத்து விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், 'விஜேதுங்கா குழுவுக்கும் சிங்களத் தளபதிகளுக்குமிடையில் முறுகல்', 'தமிழீழ வைப்பகம்: தனியரசுக்கான ஒரு அலகு', 'தமிழரின் தாயகம்: ஒரு வரலாற்று ஆவணம்', 'ஆளும் கட்சிக்குள் தோன்றியுள்ள நெருக்கடி', 'புலிகளுக்கு எதிரானதடை', 'தென்னாபிரிக்கா; மகிழ்ச்சியும் சவால்களும்', 'விஜேதுங்காவின் ஒரு வருட ஆட்சி' ஆகிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

அத்துடன், லெப். கேணல் சூட் என்ற போராளியின் குருதிச் சுவடுகளும், 'கறுப்புச் சிங்கமே! கைகளை நீட்டு குலுக்கிக் கொள்ளுவோம்'

## கலந்துரையாடல்

டல் ஒன்று எதிர்வரும் 9 ஆம் திகதி பி. ப. 2. 30 மணிக்கு வட இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

★ ★

வடமராட்சிக் கோட்டத்திற்குட்பட்ட அனைத்து வர்த்தகர் சங்க உறுப்பினர்கள் கோயில் நிர்வாக சபையினர் தொழிற்சங்க நிர்வாக சபையினர் ஆகியோருக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 9 ஆம் திகதி பி. ப. 4. 00 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடல்களில் சகலரையும் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

## புலிகள்

# விழித்தெழுவோம் பெண்ணினமே! அழித்தொழிப்போம் சீதனத்தை.

## அகதிமுகாம்

யன்பற்று, பனிப்புலம், நிச்சாமம் பகுதிகளை நோக்கி அகோர எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது நிச்சாமம் பகுதி அகதி முகாம் மீது வீழ்ந்து வெடித்த எறிகணைளால் ஒரு குழந்தையின் தந்தையான துரைராச சிங்கம் ஜெயராசா (வயது 25) என்பவர் உடல்சிதறிப் பலியானார். கடந்த கால இராணுவ நடவடிக்கைகளால் கீரிமலைப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து இப் பகுதி அகதிமுகாமில் வசித்து வந்த இவர் இடதுகையுடன் இணைந்த இடுப்புப் பகுதி முற்றாகச் சிதறிய நிலையில் இறந்து கிடந்தார்.

மற்றும் இவரது மனைவியான சாந்தினிதேவி (வயது 19), தாயாரான சின்னப்பிள்ளை (வயது 45), ஆண்டிநன்னி (வயது 65), செல்வராசா நாகராசா (வயது 24) ஆகியோர் காயமடைந்தனர்.

இதேவேளை சில்லாலை தெற்குப் பகுதி மக்கள் குடியிருப்புகள்மீது மேற் கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதல்களின்போது நாகன் பொன்னுத்துரை (வயது 65) என்பவர் காயமடைந்தார்.

### மக்கள் இடம் பெயர்வு:

மக்களின் வாழ்விடங்கள் மீது நேற்றுக் காலை சிறிலங்கா இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்ட வேளை மக்கள் பாதுகாப்பு கருதி அவ்விடங்களைவிட்டு வெளியேறிப் பாதுகாப்பான இடங்களுக்கு சென்றனர். அவசர அவசரமாக மக்கள் தமது முக்கிய சொத்துக்களையும் குழந்தைகளையும் தூக்கிய வண்ணம் நாலாபுறமும் சிதறி ஓடிய வண்ணமிருந்தனர். இவர்கள் மாலைவரை சொந்த இடங்களுக்கு திரும்பாது ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் தங்கியிருந்ததைக் காணமுடிந்தது.

[41],[பா],[நி],[சி]

## பாதுகாப்பு

சினையால் பாதுகாப்பு அமைச்சு தத்தளித்துக் கொண்டிருப்பதாக விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். திறைசேரியைப் பொறுத்த வரையில் நிதி குறைவடைந்த நிலையில் அது அரச நிறுவனங்களிடம் கடன் கேட்டு வருகிறது. இதே சமயம் பாதுகாப்பு அமைச்சுக்கு குறைநிரப்பு பிரேரணை மூலம் நிதி வழங்கும் நிலையிலும் திறைசேரி இல்லை என கூறப்படுகிறது.

வட பகுதி மீது தாக்குதல் நடத்த வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்ட உத்தேச திட்டம் செயற்படுத்த முடியாத நிலை இதனால் ஏற்பட்டுள்ளது. தென்மாகாணசபை தேர்தல் முடிந்ததும் ஏப்ரல் இறுதியில் வடபகுதி மீது இராணுவ நடவடிக்கை மேற்

## பதுங்கியிருந்த

க்கு சண்டிலிப்பாய்], லெப்டினன்ட் அன்பழகன் | அன்ரன் [தம்பிப்பிள்ளை அகிலநாதன், கொத்தியாவத்தை சுன்னாகம் மேற்கு] ஆகிய போராளிகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

இவ் இரு மாவீரர்களது வித்துடல்களும் இன்று பி. ப. 3.00 மணிக்கு அவர்களது இல்லத்தில் இருந்து எடுக்கப்பட்டு சண்டிலிப்பாய் வடக்கு, அ. த. க. பாடசாலையில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு அஞ்சலிக்கூட்டம் நிறைவுறஅணிவகுப்பு மரியாதைகளுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதி இராணுவ மரியாதைகளுடன் புனித விதைகுழியில் விதைக்கப்படும்.

## ஆதாரம் காட்டி பெறவும்

நாவாந்துறைச் சந்தையிலிருந்து தங்க நகையொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. அதன் உரிமையாளர் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதித்துறை வருவாய்ப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

## புறநிலைப் படிப்புகள்

யாழ். பல்கலைக் கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் நில அளவையும் படம் வரைகலையும் எனும் அடிப்படைக் கற்கைநெறி ஒன்று வரும் யூலை மாதம் 2ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

வார இறுதி நாள்களில் தொடர்ந்து நான்கு மாதங்கள் இடம் பெறவுள்ள இக் கற்கை நெறியில் யாழ். நில அளவையாளர் ஒருங்கிணைப்புக் கழக அங்கத்தவர்களும், மேற்படி கற்கைநெறியைப் பயில ஆர்வம் கொண்டோரும் இம்மாதம் 15ஆம் திகதிக்கிடையில் புறநிலைப் படிப்புகள் அலகிற்கு விண்ணப்பிக்கும்படி இணைப்பாளர் கோரியுள்ளார்.

ஃ ஃ ஃ

யாழ். பல்கலைக் கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில தொழில் சார் புகைப்படக்கலை எனும்அடிப்படைக் கற்கைநெறி இம் மாதம் 11ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. புகைப்படக் கலையை தொழில்துறையாக செய்ய விரும்புவோர் இதற்கு விண்ணப்பிக்கலாமென இணைப்பாளர் தெரிவிக்கின்றார்.

## மரண அறிவித்தல்கள்

அச்சுக்கோப்பாளர்களாக 2 வருடம் பணியாற்றிய அனுபவமும், பக்கம் அமைக்கக்கூடிய தேர்ச்சியும் பெற்ற ஆண்கள் தேவை. (இரவு - பகல் பணிக்கு) தகுதியுடையவர்கள் தங்களிடம் உள்ள சான்றிதழ்களுடன், 08 - 06 - 94 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கவும்.

மாறன் பதிப்பகம்,
664, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-9614)

# முக்கிய அறிவித்தல்

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
## யாழ். மாவட்டம்.

## பொதுச்சபைக் கூட்டம்

நாளை 08-06-94 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு எழிலகத்திற்கு முன்பாக அமைந்துள்ள புதிய விஞ்ஞானக் கல்விக் கழகத்தில் தனியார் கல்வி நிறுவன பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும். பல முக்கிய விடயங்கள் ஆராயப்பட விருப்பதால் அனைத்து தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகள், பிரத்தியேக வகுப்பு நிர்வாகிகள், ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொதுச் செயலாளர்
யாழ். மாவட்டம்.

(சி-9615)

## யாழ். மாவட்ட லியோ கழகங்களின் சமூக சேவை நிதிக்காக

யாழ்.மாவட்ட லியோ கழகங்கள் இணைந்து வழங்கும்

# மாபெரும் கலைவிழா

இடம்:- யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு
காலம்: 08-06-94 புதன்கிழமை பி.பகல் 4.00 மணி
பிரதமவிருந்தினர்: பேராசிரியர் திரு. க.குணரத்தினம் (துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)
சிறப்புவிருந்தினர்; லயன் எஸ். பி.சிவஞானம் (முன்னாள் வலயத் தலைவர், சர்வதேச லயன்ஸ் கழகம்-306 பீ மாவட்டம்)

**அன்பளிப்பு: ரூ.250/-, ரூ.100/-, ரூ.50/-, ரூ.25/-,**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
யாழ். மாவட்ட லியோ கழகங்களின் தலைவரும், லியோ கழகங்களும்,

விளம்பர அன்பளிப்பு:-
**சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்**

(சி-9610)

ப. 4.00 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடல்களில் சகலரையும் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

**புலிகள்**

யும் என அவர் கூறினார். மேற்படி கோரிக்கை ஜனாதிபதி செயலகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்தது.

**65 வயதைக்**

மேலும் தெரியவருகிறது.

வயோதிப காலங்களில் பிள்ளைகளை நம்பிவாழ்பவர்களுக்கு பிள்ளைகளின் சுமையை குறைக்கும் நோக்குடன் இத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது என கூறப்பட்டது.

**புலிகளின்**

- ★ ஜே. ஆர். கைக் குண்டு - 02
- ★ ஏ. கே. ரவைக் கூடு - 03
- ★ தண்ணீர் கான் கோல்சர் - 01

என்பன விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டன.

யும் சவால்களும்', 'விஜேதுங்காவின் ஒரு வருட ஆட்சி' ஆகிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

அத்துடன், லெப். கேணல் சூட் என்ற போராளியின் குருதிச் சுவடுகளும், 'கறுப்புச் சிங்கமே! கைகளை நீட்டு குலுக்கிக் கொள்ளுவோம்' என்ற கவியுரையும், 'மண்ணுக்காக' பட அறிமுகமும், அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வு பற்றிய விளக்கமும் மேலும் பல அம்சங்களும் இவ் இதழில் உள்ளடங்கியுள்ளன.


**யாழ். ஸ்ரீதரில்**

**புரூஸ்லி நடித்த GAME OF DEATH**

**தினசரி**
**பிற்பகல் 4.00மணி 6.00மணி**
**சனி, ஞாயிறு**
**காலை 10.30 மணி**
**பிற்பகல் 4.00 மணி 6.00மணி**

(சி- 9570)


என கூறப்படுகிறது.

வட பகுதி மீது தாக்குதல் நடத்த வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்ட உத்தேச திட்டம் செயற்படுத்த முடியாத நிலை இதனால் ஏற்பட்டுள்ளது. தென்மாகாணசபை தேர்தல் முடிந்ததும் ஏப்ரல் இறுதியில் வடபகுதி மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்தது. இது பின்னர் மே மாதத்திற்கு ஒத்திப் போடப்பட்டது. இப்போது திகதி ஏதும் இல்லாது வடபகுதி மீதான தாக்குதல் திட்டம் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்கவின் பெட்டகத்தில் போடப்பட்டு விட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடபகுதி மீதான பாரிய நடவடிக்கைக்கான சாத்தியக் கூறுகள் அருகிவருகின்றன. அரசியல் ஸ்திரமற்ற தன்மை, எதிர்வரும் தேர்தல் என்பவையும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் எனவும் விமர்சகர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எனினும் பாரிய இராணுவ நடவடிக்கைக்கு தாம் எப்போதும் தயார் நிலையில் இருப்பதாக உயர் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# பதவி வெற்றிடம்

பதவி; **தட்டெழுத்தாளர் | எழுதுனர் (தமிழ்) 304 | 08**

தகைமைகள்;
அ) க. பொ. த. (உ | த) வர்த்தகப்பிரிவில் சித்தியுடன்
அல்லது
ஆ) தட்டெழுத்துத் துறையில் அனுபவம் பெற்றமைக்கான சான்றிதழைக் கொண்டிருக்கவேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி; **25 - 06 - 1994**

வயதெல்லை: 18 வயதிற்கும் 45 வயதிற்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

சம்பளத் திட்டம்
1005 — 1705
40 X 5 — 50 X 10

இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் இதர படிகளும் சேர்த்து வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் காரியாலய நேரத்தில் விண்ணப்பப் படிவங்களை ரூபா 10 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி;

**பொது முகாமையாளர்**
யாழ்ப்பாணம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி.

75 | 1 பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(சி- 9612)

யாதைகளுடன் புனித விதை குழியில் விதைக்கப்படும்.

இணைப்பாளர் தெரிவிக்கின்றார்.

# மரண அறிவித்தல்கள்

## லெப். சுதன் | ஒப்பிலான்
## (சேனாதிராஜா நாகேந்திரராஜா)

தொட்டிலடியை வசிப்பிடமாகக் கொண்ட சேனாதிராஜா மங்களேஸ்வரி அவர்களின் புதல்வன் நேற்று (6 - 6 - 94) வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். இவர் வசந்தா, மகேந்திரராஜா, தவராஜா, குலேந்திரராஜா (சேனாசன்ஸ் - திருப்பதி), காலஞ்சென்ற யோகராஜா, ரவிந்திரராஜா (ரவி, தொழில் நுட்பக்கல்லூரி, கொக்குவில்), திருப்பதி அவர்களின் அன்புச் சகோதரரும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**திருப்பதி (சேனாசன்ஸ்)**

'ராஜ பவனம்'
சண்டிலிப்பாய் வடக்கு.

(8497)

## ஆ.க. நடராசா

யாழ். ஆஸ்பத்திரிவீதி, இல. 316 கொ.க. ஆ. கந்தையாபிள்ளை கடை உரிமையாளர் ஆ.க. நடராசா அவர்கள் 06-06-94 காலமானார். ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திருமதி க நடராசா
(மனைவி)

(8494)

# கண்ணீர் அஞ்சலி

## க. நடராசா

உரிமையாளா; தொ. க. ஆ. கந்தையாபிள்ளை
யாழ். சேணல் கிட்டுசாலை (மருத்துவமனை வீதி)

யாழ்நகரின் பிரபல வணிகர் க. நடராசா அவர்கள் 06-06-94 காலை இறைபதம் எய்தி உள்ளார்.

அன்னார் யாழ் வணிகர் கழகத்தின் முன்னாள் தலைவராகவும், வணிகப் பரம்பரையின் நிதானமிக்க, கண்ணியமான வணிகராக மட்டுமல்லாது பல பொதுப் பணிகளிலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்,

அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்துக்கும், வணிக நண்பர்களுக்கும் எமது அனுதாபத்தையும், ஆறுதலையும் வர்த்தகர் சார்பிலும், வணிகர் கழகத்தின் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

யாழ். வணிகர் கழகம்,
யாழ்ப்பாணம்.

(சி-9613)


இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.